**புளத்சிங்ஹள பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புளத்சிங்ஹள பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டின் நூலக புத்தகங்களின் மெய்மெய்யாய்வில் இனங்காணப்பட்ட ரூபா 117,148 தொகையான காணாமல் போன புத்தகங்களின் பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நூலக புத்தகங்களின் மெய்மெய்யாய்வின் பின்னர் எடுக்கப்பட வேண்டிய இறுதி தீர்மானத்தின் பின்னர் 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 2018 ஆம் ஆண்டின் பொருள் மெய்மெய்யாய்வில் இனங்காணப்பட்ட விற்பனை செய்யப்பட்ட மற்றும் அகற்றப்பட்ட 78 விடயங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | சபைக்குச் சொந்தமான 08 காணிகளின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் | காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் | சபைக்குச் சொந்தமான சகல காணிகளினதும் பெறுமதி |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். | இனங்காணப்பட்டவுடன் 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | நீண்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 43,859 தொகையான பெற வேண்டிய முற்பண கணக்கின் மீதி மீளாய்வாண்டின் செலவினக் கணக்குகளில் சீராக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (v) | தனியார் முன்பள்ளி பாடசாலைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 383,270 தொகையான பொருட்கள் சபைச் சொத்தாக நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) தொங்கல் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா 116,297 தொகையான செலவு மீதி சரியாக இனங்காணப்படாமல் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டிருந்தது. | தொங்கல் கணக்கில் உள்ள மீதியை சரியாக இனங்காணப்பட்டதன் பின்னர் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | சகல கணக்கு மீதிகளினதும் பட்டோலைகள் ஒப்பீடு செய்யப்பட்டமையினால் இந்த தொகையை இனங்காண முடியாமையினால் திரண்ட நிதியத்தின் ஊடாக தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என குறிப்பிடுகின்றோம். |

**(இ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 03 வருட கால எல்லையினை விஞ்சிய வேலைக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் முறையே ரூபா 58,543 மற்றும் ரூபா 782,536 தொகைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரை ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 952,001 தொகையினை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

----------------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | - | | | |
| (i) | 21 ஆம் பிரிவு | | சபைக்குச் சொந்தமான ஒட்டுமொத்த வீதிகளின் அளவும் கிராம சேவகர் பிரிவின் பிரகாரம் இனங்காணல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுபைக்குச் சொந்தமான வீதிகள் கிராம சேவகர் பிரிவின் பிரகாரம் இனங்காணப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | 134(1) ஆம் பிரிவு | | சபையினால் ஆதன வரிக்காக புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இயற்கை அனர்த்தங்களுக்கு முகங்கொடுக்கின்ற பிரதேசமாக இருந்தமையினால் பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் 134(1) ஆம் பிரிவின் பிரகாரம் இது வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 143(1) ஆம் பிரிவு | மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆதனமொன்றில் பௌதீக வேறுபாடு ஏற்படுமிடத்து மதிப்பீட்டினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iv) | 160 ஆம் பிரிவு | நிலுவை ஆதன வரியை அறவிடலின் இறுதி கட்டமாக ஆதனங்கள் தடை செய்யப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் போது நிலுவையை அறவிடுவதற்கு உரிய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | சபைக்குச் சொந்தமான சகல காணி கட்டிடங்களும் வருடத்திற்கு ஒரு முறையேனும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்திற்காக மெய்மெய்யாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,003,584 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,318,814 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 4,263,767 | 3,552,662 | 3,438,728 | 686,754 | 3,538,767 | 3,147,502 | 2,927,209 | 708,683 |
| (ii) | வாடகை | 4,205,000 | 374,821 | 1,016,814 | 35,622 | 4,960,000 | - | 650,110 | - |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 756,000 | 715,334 | 793,049 | 8,000 | 610,000 | 350.000 | 716,443 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 24,330,000 | - | 18,176,299 | - | 21,580,000 | - | 13,577,105 | - |
| | | 33,554,767 | 4,642,817 | 23,424,890 | 730,376 | 30,688,767 | 3,497,502 | 17,870,867 | 708,683 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஏக்கர் வரி நிலுவை ரூபா 71,868 ஆக இருந்ததுடன் 2020 யூன் 30 இல் உள்ளவாறு 14,638 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

#### (அ) நீதிமன்ற தண்டப் பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 5,735,667 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக ரூபா 5,500,000 சிட்டையிடப்பட்டிருந்தது. 2020 யூன் 30 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 7,457,748 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

(ஆ) முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் நிலுவையாக இருந்த முத்திரைக் கட்டணம் ரூபா 12,689,345 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டிற்காக ரூபா 8,500,000 சிட்டையிடப்பட்டிருந்தது. 2020 யூன் 30 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 8,353,995 ஆகும். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் பாதீட்டில் வீதி அபிவிருத்திக்காக சபை நிதியத்தின் கீழ் ரூபா 2,200,000 தொகையான நிதி ஏற்பாடு உள்ளடக்கப்பட்ட போதிலும், அது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்கண்டு மீளாய்வாண்டின் அமுல்படுத்தப்படாமையினால் ஒதுக்கப்பட்ட மொத்த நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் சரியாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வீதிகளில் அதிகமான பகுதி வெளிவாரி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அபிவிருத்தி நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன. |
| (ஆ) | வெளிவாரி நிதி ஏற்பாட்டின் கீழ் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்ட ரூபா 12.4 மில்லியன் கிரயமான 13 வீதி செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு புறம்பாக வெளிவாரி நிதி ஏற்பாட்டின் கீழ் கிடைத்த ரூபா 19.36 மில்லியன் மதிப்பீட்டு நிதி ஏற்பாட்டில் 24 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். வெளியாரினால் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளுக்காக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். | வெளிவாரி செயற்திட்டங்களில் அதிகமான பகுதி இது வரையிலும் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபை அதிகார பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தர் பிரிவிற்காக ஒரு சமூக சபையொன்று வீதம் ஸ்தாபிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், புளத்சிங்ஹள பிரதேச சபையின் 54 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக 21 சமூக சபைகளை மாத்திரம் ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | சபை அதிகார பிரதேசத்தில் சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காகவும் சமூக சபைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும். | 21 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்காக சமூக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பெறவேண்டிய சம்பள மீளளிப்பு கணக்கில் காணப்படுகின்ற ரூபா 4,260,117 செலவு மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீதியை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| **(அ)** | **ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை**<br>நூலகர் பதவி, வருமான பரிசோதகர் பதவி, இரண்டு முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் பதவிகள், வேலை மேற்பார்வையாளர் பதவி, சுகாதார மேற்பார்வையாளர் பதவி, இயந்திர செயற்படுத்துனர் பதவி, வேலைத் தொழிலாளர் பதவி மற்றும் சகாதார தொழிலாளர் பதவி என்பவற்றின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நூலகர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கான அதிகாரத்தரப்பான மேல்மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வருமான பரிசோதகர் பதவியில் வழக்கொன்று காணப்படுகின்றமையினால் ஆட்சேர்ப்புக்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மிகுதி பகுதிகளுக்காக எதிர் காலத்தில் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஆ) **அறவிடப்படாதுள்ள ஊழியர் கடன்**

| | | |
|---|---|---|
| 2020 யூன் 30 இல் உள்ளவாறு மரணமடைந்த, ஓய்வு பெற்றுச் சென்ற மூன்று ஊழியர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 78,507 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதி விரைவாக அறவிடப்பட வேண்டும். | கடனை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணிகளை சட்ட ரீதியாக அளந்து எல்லை வேலியினை அமைத்து பொது நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாமையின் காரணமாக 04 காணிக் கூறுகளை வெளித்தரப்பினர் கைப்பற்றியிருந்தனர். | சபைக்கு பொது வசதிகளின் கீழ் ஒதுக்கப்படுகின்ற காணிகளை அபிவிருத்தி பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கும் பாதுகாத்துக் கொள்வதற்கும் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். | அபிவிருத்திகளுக்காக சபைக்கு நிதி ரீதியான இயலுமை காணப்படாதிருந்ததுடன் எதிர் காலத்தில் அளந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.4.2 இனங்காணப்பட்ட நட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தனியார் கம்பனியொன்றினால் சபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் முதல் சந்தர்ப்பத்தின் போது சாதகமான தீர்ப்பொன்று கிடைத்ததன் பின்னர் உரிய கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீட்டின் பின்னர் சபையினால் உரிய வழக்கை கவனத்தில் கொள்ளாது விட்டமையினால் பாதகமான தீர்ப்பொன்று கிடைத்ததன் மூலம் அந்த கம்பனிக்கு இழப்பீடாக ரூபா 7,840,000 தொகை செலுத்துவதற்கு ஏற்பட்டிருந்தது. | சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்ட செலவினங்களை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த விடயங்கள் தொடர்பாக விசாரணையொன்றை மேற்கொள்ள உள்ளூராட்சி ஆணையாளருக்கு கோரி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. |

**3.5 பெறுகைகள்**

**ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வீதி கொங்கிரீட் இடும் போது வீதியின் தரத்தை உறுதிப்படுத்தும் Core பரிசோதனை மூலம் அல்லது cube பரிசோதனை மூலம் மேற்கொள்ளப்பட முடியுமாக இருந்த போதிலும், அந்த பரிசோதனை இரண்டும் வெவ்வேறாக மேற்கொள்ளப்பட்டமையினால் 05 செயற்திட்டங்களுக்காக ரூபா 131,189 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கொங்கிரீட் வீதிகளை நிர்மாணிக்கும் போது தரப்பரிசோதனைக்காக Core மற்றும் cube test இரண்டும் ஒரே தெரிவின் கீழ் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது அவ்வாறு மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், சகல மாதிரிகளையும் பெறுதல் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்தில் பரிசோதனைகள் இவ்வாறு மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |